**TETMAPP/25**

Don't write anything in this space

தேர்வு : அரசு உதவி வழக்கு நடத்துநர், நிலை-II பதவிக்கான முதன்மை எழுத்துத் தேர்வு

பாடம் : தமிழ்மொழி தகுதித் தேர்வு (பத்தாம் வகுப்புத் தரம்) (தாள் – I) (விரிந்துரைக்கும் வகை)

தேர்வு நாள் : 26.07.2025 மு.ப

Do not use this area
TNPSC

Booklet Serial No. :

Don't write anything in this space

தேர்வு : அரசு உதவி வழக்கு நடத்துநர், நிலை-II பதவிக்கான முதன்மை எழுத்துத் தேர்வு

பாடம் : தமிழ்மொழி தகுதித் தேர்வு (பத்தாம் வகுப்புத் தரம்) (தாள் – I) (விரிந்துரைக்கும் வகை)

தேர்வு நாள் : 26.07.2025 மு.ப

பதிவு எண் :

விண்ணப்பதாரரின் கையொப்பம் மற்றும் தேதி

SPECIMEN

**சான்று**

நான் விண்ணப்பதாரரின் நுழைவுச்சீட்டில் உள்ள பதிவு எண், புகைப்படம் மற்றும் கையொப்பம் ஆகியவற்றினை சரிபார்த்த பின் இந்த வினா விடைத் தொகுப்பினை வழங்கினேன்.

அறைக்கண்காணிப்பாளரின் கையொப்பம் மற்றும் தேதி

**சான்று**

(தேர்வு முடிவுற்றவுடன் கையொப்பமிட வேண்டும்)

நான் இந்த வினா விடைத் தொகுப்பில் பதிலளிக்காத விடைப் பகுதிகளை தேர்வு எழுதப் பயன்படுத்திய கருப்பு மை பேனா(மையூற்று பேனா அல்லது பந்துமுனை பேனா அல்லது ஜெல் பேனா)வினால் குறுக்குக் கோடிட்டுள்ளேன் என உறுதியளிக்கிறேன்.

விண்ணப்பதாரரின் கையொப்பம் மற்றும் தேதி

TNPSC - SPECIMEN
Do not use this area

# தாள் – I

# தமிழ்மொழி தகுதித் தேர்வு

## (விரிந்துரைக்கும் வகை)

## (பத்தாம் வகுப்புத் தரம்)

கால அளவு : மூன்று மணி நேரம் மொத்த மதிப்பெண்கள் : 100

(இவ்வினா-விடைத்தாள் தொகுப்பு 32 பக்கங்களைக் கொண்டுள்ளது)

**அறிவுரைகள்**

(கீழ்க்கண்ட அறிவுரைகளை தேர்வர்கள் தவறாமல் பின்பற்ற வேண்டும்)

1. தாள்-Iஇல் குறைந்தபட்ச தகுதி மதிப்பெண்கள் 40 பெற்றால் மட்டுமே பிறதாள்கள் மதிப்பீடு செய்யப்படும்.

2. தேர்வர்கள் இவ்வினா-விடைத்தாள் தொகுப்பு மொத்தம் 32 பக்கங்களைக் கொண்டுள்ளது என்பதை முதலில் உறுதி செய்து கொள்ள வேண்டும். வினா-விடைத்தாள் தொகுப்பில் ஏதேனும் குறைபாடு இருப்பின், தேர்வர் அதனை தேர்வு தொடங்கும் நேரத்திற்கு முன்னதாக அறைக்கண்காணிப்பாளரிடம் தெரிவித்து, சரியாக உள்ள வேறொரு முழுமையான வினா-விடைத்தாள் தொகுப்பினை கட்டாயம் பெற்றுக்கொள்ள வேண்டும். தேர்வு தொடங்கிய பின்பு குறைபாடு குறித்து முறையிட்டால், மாற்றித் தரப்படமாட்டாது.

3. தேர்வர்கள் இந்த வினா-விடைத்தாள் தொகுப்பிலிருந்து எந்தத் தாளையும் கிழித்துவிடக் கூடாது.

4. தேர்வர்கள் இவ்வினா-விடைத்தாள் தொகுப்பில் கையொப்பமிடுவதற்கென குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து இடங்களிலும் கையொப்பமிட வேண்டும். கையொப்பமிடாத தேர்வர்களின் விடைத்தாட்கள் செல்லாததாக்கப்படும்.

5. (i) தேர்வர்கள் ஒவ்வொரு வினாவிற்கும் விடை எழுதுவதற்கென வினா-விடைத்தாள் தொகுப்பில் ஒதுக்கப்பட்ட இடத்தில் மட்டுமே விடையளிக்க வேண்டும். விடையளிக்க ஒதுக்கப்பட்ட இடத்திற்கு வெளியே எதையும் எழுதக்கூடாது.

   (ii) தேர்வர்கள் வினாக்களுக்கு விடையளித்த பின்னர் மீதமுள்ள வெற்றிடங்களையும் விடையளிக்காத வினாவிற்கான வெற்றிடங்களையும் அனுமதிக்கப்பட்ட கருமை நிற மை பேனாவினால் குறுக்கு கோடிட்டு கண்டிப்பாக அடித்துவிட வேண்டும்.

TNPSC-SPECIMEN

6. தேர்வர்கள் விடையளிக்கும் போது தேவைப்படும் இடங்களில் வினா எண்ணையும், அதன் உட்பிரிவையும் தவறாமல் குறிப்பிட வேண்டும்.

7. தேர்வர்கள் கடித வடிவிலான வினாக்களுக்கு விடையளிக்கும் பொழுது தங்களது பெயரையோ, பதிவெண்ணையோ எழுதக்கூடாது. தங்களது பெயரில் கையொப்பமிடவும் அனுமதியில்லை. அவ்வாறான வினாக்களுக்கு பதிலளிக்கும்பொழுது வினாக்களில் குறிப்பிடப்பட்டுள்ள பெயர் மற்றும் முகவரியையே பயன்படுத்த வேண்டும்.

   வினாக்களில் பெயர், முகவரி ஆகியவை குறிப்பிடப்படவில்லையெனில், 'அனுப்புநர்', 'பெறுநர்' முகவரிகளில் 'அ ஆ இ' அல்லது 'எக்ஸ் ஒய் இசட்' போன்ற பொதுப் பெயர்களை மட்டுமே எழுத வேண்டும்.

8. தேர்வர்கள் இவ்வினா-விடைத்தாள் தொகுப்பில் ஒவ்வொரு பிரிவிலும் அறிவுறுத்தப்பட்டுள்ள எண்ணிக்கையிலான வினாக்களுக்கு மட்டுமே விடையளிக்க வேண்டும். அதற்கு மிகையான எண்ணிக்கையிலான வினாக்களுக்கு விடையளித்தால், ஒவ்வொரு பிரிவின் முடிவிலும் மிகையான எண்ணிக்கையில் விடையளிக்கப்பட்டவை கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட மாட்டாது.

9. தேர்வர்கள் தங்களது பதிவு எண்ணை இவ்வினா-விடைத்தாள் தொகுப்பில் எந்த இடத்திலும் எழுதக்கூடாது. இந்த அறிவுரையை மீறும் தேர்வர்களின் விடைத்தாட்கள் செல்லாததாக்கப்படும்.

10. இத்தேர்வைப் பொறுத்தவரை, அழகாக எழுதுவதற்காகவும், எழுத்துப்பிழையின்றி எழுதுவதற்காகவும் தனியாக மதிப்பெண்கள் ஒதுக்கப்படவில்லை.

---

TNPSC - SPECIMEN

## அலகு — 1 (அ)

*குறிப்பு :* **i) கொடுக்கப்பட்ட தமிழ்ப் பகுதியை நன்கு படித்து கருத்துச் சிதையாமல் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கவும் :**

**(1 × 10 = 10)**

| | |
|---|---|
| Q.No. 1 | தங்கம், வெள்ளி, வெண்கலம் போன்ற விலைமதிப்பற்ற உலோகங்கள் உலோகப் பணமாகப் பயன்படுகின்றன. உலோகத்தின் நிலையான எடையும் துல்லியமும் தங்கம் மற்றும் வெள்ளி ஆகியவை முத்திரையுடன் கூடிய பரிமாற்றக் கருவியாகப் பயன்படுத்தப்பட்டபோது கவனிக்கப்பட்டன. உலோகப் பணங்கள் மிக எளிதாக வெவ்வேறு பிரிவுகளாகப் பிரிப்பதற்கும், எடுத்துச் செல்வதற்கும், செலுத்துவதற்கும் வசதியாக இருந்தன.<br>பண்டைய வரலாற்று ஆசிரியரான ஹெரடோடஸ் கி.மு. (பொ.ஆ.மு) 8-ம் நூற்றாண்டில் லிடியாவின் பேரரசர் மிடாஸ் உலோக நாணயத்தைக் கண்டுபிடித்தார் என்று கூறுகிறார். இந்தியாவில் கி.மு. 6 ஆம் நூற்றாண்டில் மஹாஜனபதங்கள் என்பவரின் ஆட்சியில் முதன்முறையாக பூரணாஸ், கர்ஷபணம், பனாஸ் போன்ற நாணயங்கள் அச்சடிக்கப்பட்டன என்று கூறுகின்றனர்.<br>தங்கம், வெள்ளி, தாமிரம், ஈயம் போன்ற நாணயங்களை மௌரியர்கள் துளையிட்டு வெளியிட்டனர். கிரேக்கர்களின் தாக்கம் பெற்ற இந்திய குஷாண அரசர்கள் கிரேக்கத்தின் மரபுப்படி சித்திரங்கள் பொறிக்கப்பட்ட நாணயங்களை அறிமுகப்படுத்தினர். 12வது நூற்றாண்டில், டெல்லி துருக்கி சுல்தான்கள் வெளியிட்ட நாணயங்களில் இந்திய அரசர்களின் உருவத்தை நீக்கி உருது எழுத்துகளைப் பொறித்து வெளியிட்டனர். தங்கம், வெள்ளி, தாமிரத்தால் ஆன நாணயங்களை டாங்கா என்றும், மதிப்பு குறைந்த நாணயங்களை ஜிட்டால் என்றும் அழைத்தனர். |

## அலகு — 1 (ஆ)

*குறிப்பு :* **ii) கொடுக்கப்பட்ட ஆங்கிலப் பகுதியை நன்கு படித்து கருத்துச் சிதையாமல் தமிழில் மொழிபெயர்க்கவும் :**

**(1 × 10 = 10)**

| | |
|---|---|
| Q.No. 2 | Cauvery :<br>The river Cauvery originates at Talacauvery in the Brahmagiri hills of Kodagu (Coorg) district of Karnataka in the Western Ghats. Total length of Cauvery river is 805 km. About 416 km of its course falls in Tamil Nadu. It serves as the boundary between Karnataka and Tamil Nadu for a distance of 64 km. It forms Hogenakkal water falls in Dharmapuri district. Mettur Dam, also called as the Stanley Reservoir, is located across this river in Salem district. A tributary called Bhavani joins Cauvery on the right bank about 45 km from the Mettur Reservoir, Thereafter, it takes easterly course to enter into the plains of Tamil Nadu.<br>Two more tributaries, Noyyal and Amaravathi, confluence the river on the right bank at Thirumukkudal 10 km from Karur. The river is wider in this region, where it is called as 'Agandra Cauvery'. |

TNPSC - SPECIMEN

அலகு — 2

*குறிப்பு :* **i) கொடுக்கப்பட்ட பகுதியை அதன் அளவில் மூன்றில் ஒரு பங்கு அளவில் சுருக்கி உங்கள் சொந்த நடையில் எழுதுக. தலைப்பு தேவையில்லை.**

**(1 × 10 = 10)**

| Q.No. | |
|---|---|
| 3 | மொழிபெயர்ப்பு, எல்லாக் காலங்களிலும் தேவையான ஒன்று. விடுதலைக்குப் பிறகு நாட்டின் பல பகுதிகளையும் ஒரே ஆட்சியின் கீழ் இணைக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. தேசிய உணர்வு ஊட்டுவதற்கும் ஒருமைப்பாட்டை ஏற்படுத்துவதற்கும் இந்திய அரசு மொழிபெயர்ப்பை ஒரு கருவியாகக் கொண்டது; ஒரு மொழியில் இருக்கும் நூல்களைப் பிற மொழியில் மொழிபெயர்த்தது; பல்வேறு மாநிலங்களில் புகழ்பெற்ற எழுத்தாளர்களைப் பற்றிய நூல்களையும் வெளியிட்டது. இத்தகைய மொழிபெயர்ப்பு முயற்சிகள் சாகித்திய அக்காதெமி, தேசிய புத்தக நிறுவனம், தென்னிந்திய புத்தக நிறுவனம் ஆகியவற்றின் மூலம் செய்யப்பட்டன. மொழிபெயர்ப்பின் தேவையை உணர்த்த ஒரு நிகழ்ச்சியைச் சொல்கிறார்கள். உலகப் போரின் போது அமெரிக்கா, "சரண் அடையாவிடில் குண்டு வீசப்படும்" என்ற செய்தியை ஜப்பானுக்கு அனுப்பியதாகவும், அதற்கு ஜப்பான் 'மொகு சாஸ்ட்டு' என்று விடை அனுப்பியதாகவும் கூறுவர். அந்தத் தொடரின் பொருள் தெரியாததால் அமெரிக்கா, ஹிரோஷிமாவில் குண்டு வீசியது என்று சொல்கிறார்கள். அந்தத் தொடருக்குப் பொருள், 'விடைதர அவகாசம் வேண்டும்' என்ற பொருள் கொண்டது என்பர். இது உண்மை எனில், மொழிபெயர்ப்பு சரியாக அமையாத போது மிகப்பெரிய பேரழிவு கூட ஏற்படும் என்பதைப் புரிந்து கொள்ளலாம். |

TNPSC - SPECIMEN

## அலகு — 3

*குறிப்பு :* i) கொடுக்கப்பட்டுள்ள பத்தியை நன்கு படித்து அதன் கீழ் கேட்கப்பட்டுள்ள ஐந்து வினாக்களுக்கு விடையளிக்கவும்.

ii) ஒவ்வொரு வினாவிற்கும் இரண்டு மதிப்பெண்கள்.

**(5 × 2 = 10)**

| Q.No. | |
|---|---|
| 4 | இலக்கியத்தின் இயல்புகள் யாவும் முழுமையாக இடம் பெற்றுள்ள 'படைப்பு இலக்கியத்தையே' தூய இலக்கியம் என்பர். கற்பனைக்கோ, கலையழகிற்கோ இடம் தராமல் கருத்துகளை அறிவுறுத்தும் பாங்கில் அமைந்தவற்றைச் 'சார்பு இலக்கியம்' எனும் பெயரால் சுட்டுவார்.<br><br>இவற்றின் வேறுபாட்டைப் பாரதியாரின் குயில்பாட்டையும் கபிலர் அகவலையும் கொண்டு தெளியலாம். கபிலருடைய அகவலில் கருத்தை வெளிப்படுத்தும் முறையில் இலக்கிய இயல்புகள் சில இடம் பெற்றுள்ளதை மறுக்க இயலாது. படிப்போருடைய உள்ளத்தைத் திருத்திச் செம்மைப்படுத்தும் வகையில் சாதிக் கொடுமைகளையும், தீண்டாமையின் இழிவையும் உணர்த்தி, 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' எனும் சிறப்புமிகு சிந்தனையைப் பொருத்தமான ஒருவகை நடை நலத்தோடு கபிலர் எனும் புலவர், இந்த நூலில் அறிவுறுத்தியுள்ளார். ஆனால் இந்த நூலில் 'எடுத்துரைக்கும் கருத்திற்கே' முதன்மை இடம் தரப்பட்டுள்ளது; அந்தக் கருத்தை ஆசிரியர் கலைநயத்தோடு வெளிப்படுத்துவதைத் தம்முடைய நோக்கமாகக் கொள்ளவில்லை.<br><br>தம்முடைய வாசகர்களுக்குத் தாம் கூற விரும்பும் கருத்துகள் எளிதில் புரியுமாறு அமைய வேண்டும் என்னும் நோக்கத்தோடு மட்டுமே, கபிலர் இந்த அகவலைப் படைத்துள்ளார் என்பதை மேற்போக்காக இந்த நூலைப் படிப்பவர் யாவரும் உணர முடியும்.<br><br>அந்தக் கருத்துகளைத் தம்முடைய வாதமுறைக்கு ஏற்பத் தொடர்புடையதாக அமையுமாறு எடுத்துரைப்பதில் வல்லவராகக் கபிலர் காட்சியளிக்கிறார்.<br><br>குறிப்பிட்ட ஒரு நோக்கத்திற்காக, இலக்கியத்தின் இயல்புகள் சில கபிலர் அகவலில் பயன்படுத்தப்பட்டுள்ளன. அக்காலச் சூழலுக்கு ஏற்ப, அதனுடைய வடிவம் செய்யுளால் அமைந்து இருக்கிறது. எதுகை, மோனை இடம் பெற்றுள்ளன. இலக்கியத்தின் உயிராகக் கருதப்படும் உணர்ச்சிப் பெருக்கும் ஓரளவிற்குப் பொங்கிவழிகிறது. |

1. சார்பு இலக்கியம் என்றால் என்ன?

2. கபிலர், பாரதியார் - இருவரில் யார் தூய இலக்கியம் சார்ந்தவர், யார் சார் இலக்கியம் சார்ந்தவர்?

3. கபிலர் எதற்கு முதன்மை இடம் தருகிறார்?

4. கபிலர் தம் நூலில் அறிவுறுத்துவன யாவை?

5. கபிலர் அகவலை மேம்போக்காகப் படிப்பவர் எதை உணர்வர்?

TNPSC-SPECIMEN

## அலகு — 4

*குறிப்பு :* i) **கொடுக்கப்பட்டுள்ள சுருக்கக் குறிப்புக்களைக் கொண்டு விரிவாக எழுதுக.**
ii) **300 வார்த்தைகளுக்கு மிகாமல் விடையளிக்கவும்.** **(1 × 10 = 10)**

| | |
|---|---|
| Q.No. 5 | ஓவியக்கலை – ஆயக்கலைகளினுள் ஒன்று – ஓவிய வகைகள் – குகை ஓவியம் – சுவர் ஓவியம் – துணி ஓவியம் – ஓலைச்சுவடி ஓவியம் – செப்பேட்டு ஓவியம் – தந்த ஓவியம் – கண்ணாடி ஓவியம் – தாள் ஓவியம் – கருத்துப்பட ஓவியம் – நவீன ஓவியம். |

## அலகு — 5

*குறிப்பு :* i) **திருக்குறள் தொடர்பான கட்டுரை வரைதல்.**
ii) **கொடுக்கப்பட்டுள்ள ஐந்து வினாக்களில் ஏதேனும் ஒரு வினாவிற்கு மட்டும் விடையளிக்கவும்.**
iii) **300 வார்த்தைகளுக்கு மிகாமல் விடையளிக்கவும்.**

**(1 × 15 = 15)**

| | | |
|---|---|---|
| Q.No. 6 | (அ) | திருக்குறளில் ‘அறன்வலியுறுத்தல்’ எனும் அதிகாரம் உலக மக்கள் அனைவருக்கும் ஏற்ற அறங்களை வலியுறுத்துகிறது – நிறுவுக. |
| | (ஆ) | வள்ளுவரின் நீர் மேலாண்மை குறித்து எழுதுக. |
| | (இ) | நல்ல குடிமகன் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதை வள்ளுவர் வழி நின்று விளக்குக. |
| | (ஈ) | அருளுடைமை எனும் அதிகாரத்தில் வள்ளுவர் உணர்த்தும் மனித நேயச் சிந்தனைகளை விளக்குக. |
| | (உ) | அரசியல் பொருளாதார நிகழ்வுகளில் ஆராய்ந்து செய்ய வேண்டியன குறித்து வள்ளுவர் கூறுவன யாவை? |

## அலகு — 6

*குறிப்பு :* i) **கடிதம் வரைதல்**
ii) **கொடுக்கப்பட்ட மூன்று வினாக்களில் ஏதேனும் ஒரு வினாவிற்கு மட்டும் விடையளிக்கவும்.**
iii) **250 வார்த்தைகளுக்கு மிகாமல் விடையளிக்கவும்.**

**(1 × 15 = 15)**

| | | |
|---|---|---|
| Q.No. 7 | (அ) | அரியலூர் மாவட்டம் அரியலூரில் அமைந்துள்ள அரசினர் கலைக்கல்லூரியில் அருங்காட்சியகம் அமைத்திட திட்ட மதிப்பு ஒன்றை தயார் செய்தல். |
| | (ஆ) | வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை 2022–23 திட்டத்தின் கீழ் ‘நெல்லுக்குப் பின் பயறு சாகுபடி செய்தல்’ திட்டத்தைக் குறித்து ஒரு கருத்துரு தயார் செய்க |
| | (இ) | குடும்பத் தலைவியர்க்கு மாதம் ரூ. 1,000/- உதவித்தொகை கொடுப்பதற்கான திட்ட மதிப்பீட்டைத் தயார் செய்க. |

TNPSC SPECIMEN

## அலகு — 7

*குறிப்பு :*

i) பின்வரும் ஐந்து பிரிவுகளில் ஒவ்வொரு பிரிவிலும் நான்கு வினாக்கள் உள்ளன.

ii) ஒவ்வொரு பிரிவிலும் உள்ள அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

iii) ஒவ்வொரு பிரிவிற்கும் நான்கு மதிப்பெண்கள்.

iv) ஐந்து பிரிவுகளுக்கும் சேர்த்து மொத்தம் இருபது மதிப்பெண்கள்.

**(5 × 4 = 20)**

| | |
|---|---|
| Q.No. 8 | **கீழ்க்காணும் சொற்களை உமது சொந்த வாக்கியத்தில் அமைத்து எழுதுக.** |
| | (1) அறவழி |
| | (2) ஆட்சிமொழி |
| | (3) தவச்சாலை |
| | (4) ஆறாத்துயர் |
| Q.No. 9 | **பின்வரும் இணைச் சொற்களைப் பயன்படுத்தி ஒரே தொடர் அமைக்க.** |
| | (1) எலும்பும் தசையும் |
| | (2) உடலையும் உயிரையும் |
| | (3) பசியும் சோர்வும் |
| | (4) தோட்டங்களிலும் வயல் வெளிகளிலும் |
| Q.No. 10 | **பிரித்தெழுதுக.** |
| | (1) க ச ட ற |
| | (2) எழுத்தென்ப |
| | (3) கற்றறிந்தார் |
| | (4) மணற்கேணி |

TNPSC - SPECIMEN

| Q.No. 11 | எதிர்மறை வாக்கியமாக மாற்றுக. |
|---|---|
| | (1) மரத்தை வளர்ப்பது நன்மை பயக்கும் |
| | (2) புலி புல்லைத் தின்னும் |
| | (3) கல்வியே ஒருவருக்கு உயர்வு தரும் |
| | (4) வள்ளி பூமாலை தொடுத்தாள். |

| Q.No. 12 | பிழை நீக்கி எழுதுக : |
|---|---|
| | (1) குரிஞ்சி ஒழுக்கத்தை விலக்கிச் செல்கிறது ? |
| | (2) இளக்கிய நூள் வள்ளோர் பளர். |
| | (3) நள்ளதொறு நாலைத்தேற்ந்தெடுத்து அன்னாளின் எள்ளோர் உறைகலையும் அரிமுகம் செய்க. |
| | (4) தொன்டை நாட்டிளுள்ள துரைமங்களம் என்னும் ஊறில் வாழ்ந்தவற். |

TNPSC - SPECIMEN